## சுங்க அறிவித்தல்

### அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 06/2018

### 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை அனைவரும் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.

ஆர்.எச்.எஸ். சமரதுங்க
செயலாளர்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு – 01.
2018 யூலை மாதம் 10 ஆந் திகதி.

## 1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்

## கட்டளை

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான் 2018 யூலை மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் செயல்வலுவுக்கு வருமாறு இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள் ஒவ்வொன்றின் மீதும் அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதத்தில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) அட்டவணை ‘அ’ இன் ஏற்பாடுகளின் கீழுள்ள முன்னுரிமை வீதமொன்று விதிக்கப்பட்டு செலுத்தப்படக் கூடியதாக இருக்குமிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதத்தில் இறக்குமதித் தீர்வையைக் கோரி அறவிடுமாறு சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களை, இக்கட்டளை மூலம் கேட்டுக் கொள்கின்றேன்.

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு – 01.
2018 யூலை மாதம் 10 ஆந் திகதி.

அட்டவணை

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 22.02 | | | நீர், கனிப்பொருள் நீரும் காற்றூட்டப்பட்ட நீரும் உட்பட, சீனி அல்லது வேறு இனிப்புப் பதார்த்தங்கள் சேர்க்கப்பட்டவை அல்லது மணமூட்டப்பட்டவை மற்றும் பிற மதுசாரப் பானங்களும் தலைப்பு 20.09 இன் கீழுள்ள பழச் சாறு அல்லது மரக்கறி சாற்றைக் கொண்டிராதவை. | | | |
| | 2202.99 | -- | பிற: | | | |
| | 2202.99.10 | --- | குடிபான வடிவிலான தேயிலை | | 30% | லீ |
| | 2202.99.20 | --- | இலங்கைத் தேசிய மருத்துவ ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் மருந்துகளாக அங்கீகரிக்கப்பட்ட பானங்கள் | | 30% | லீ |
| | 2202.99.30 | --- | "சக்தியளிக்கும் பானங்கள்" என சில்லறை விற்பனைக்கு விடப்பட்ட குடிபானங்கள் | | 30% | லீ |
| | 2202.99.40 | --- | மூலிகையினை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் | | 30% | லீ |
| | | --- | பழச்சாறு அல்லது மரக்கறிச் சாற்றை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள்: | | | |
| | 2202.99.51 | --- | 100 மி.லீற்றருக்கு 6 கிராமிற்கு அதிகமானளவு சீனி சேர்க்கப்பட்டவை | | 30% | லீ |
| | 2202.99.59 | --- | பிற | | 30% | லீ |
| | | --- | பாலினை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் | | | |
| | 2202.99.61 | --- | 100 மி.லீற்றருக்கு 6 கிராமிற்கு அதிகமானளவு சீனி சேர்க்கப்பட்டவை | | 30% | லீ |
| | 2202.99.69 | --- | பிற | | 30% | லீ |
| | 2202.99.70 | --- | தூனியம் அல்லது மர விதைகளை அடிப்படையாகக் கொண்ட குடிபானங்கள் | | 30% | லீ |
| | | --- | பிற: | | | |
| | 2202.99.91 | --- | 100 மி.லீற்றருக்கு 6 கிராமிற்கு அதிகமானளவு சீனி சேர்க்கப்பட்டவை | | 30% | லீ |
| | 2202.99.99 | ---- | பிற | | 30% | லீ |
| 14.04 | 1404.90.10 | --- | பீடி இலைகள் | | 30% அல்லது ஒரு கி.கி ரூபா 250/= | கி.கி |